“பிஸ்மில்லாஹ் ஹிர்ரஹ்மான் னிர்ரஹீம்"

# திருக்குர்ஆன் திறனாய்வுப் போட்டி – 2021

**நோக்கம்:**

**திருக்குர்ஆன்னை பொருளுணர்ந்து படிக்க வேண்டும் என்பதற்காகவே இந்த போட்டி நடத்தப்படுகிறது.**

**போட்டிக்கான விதிமுறைகள்:**

**A,** ஆண்கள், பெண்கள், சிறுவர் மற்றும் சிறுமியர்கள் கலந்து கொள்ளலாம்,

**B,** கிழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகள் அனைத்தும் திருக்குர்ஆன்னின் **1வது அத்தியாம்(அல் ஃபாத்திஹா- தோற்றுவாய்) முதல் 25வது அத்தியாயம் ( அல் ஃபுர்கான் – வேறுபடுத்தி காட்டுவது)** வரையிலிருந்து மட்டுமே கேட்கப்பட்டுள்ளது, இவைகளில் இருந்து மட்டுமே பதில்களை எழுத வேண்டும்.

**C,** கிழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் சில கேள்விகளாகவும், சில குர்ஆனில் வரும் வாக்கியங்களாகவும் அல்லது சொல்லாடலாகவும் கொடுக்கப்பட்டுள்ளது, அவைகளுக்கு பொருத்தமான குர்ஆன் வசனம் மற்றும் வசன எண்ங்களையும் சேர்த்து பதிலாக எழுதி அனுப்ப வேண்டும்.

**D,** விடைகள் வரிசை எண் அடிப்படையில் எழுதி அனுப்ப வேண்டும்.

**E, அல்லாஹ்விற்கு அஞ்சி எக்காரணம் கொண்டும் யாரிடமும் கேட்டோ, காப்பி அடித்தோ, அல்லது கேள்வியில் உள்ள வார்த்தைகளை பயன்படுத்தி இணையதளத்திலோ அல்லது ஆண்டராய்ட்களில் உள்ள குர்ஆன் ஆப்(Application) தேடுதல்(Search ) மூலமாகவோ விடைகளை தேடி எழுத கூடாது, அதற்கான கையொப்பம்மிட்ட உறுதிமொழியும் வழங்கவேண்டும்.**

**F,** திருக்குர்ஆன்னை பொருளுணர்ந்து படிப்பதற்கு குர்ஆன் ஆப்களை பயன்படுத்தி கொள்ளலாம்.

**G,** கேள்விகள் அனைத்தும் தமிழில் வெளிவந்துள்ள திருக்குர்ஆன் மொழியாக்கங்களில் இருந்தே கேட்கப்பட்டுள்ளது, ஆகையால் எந்த மொழியாக்கத்தையும் பொருளுணர்ந்து படித்து விடை எழுதலாம்.

**H,** விடைத்தாளின் இறுதியில் பெயர், இருப்பிடம் மற்றும் தொடர்பு எண்களை குறிப்பிட்டு அனுப்பவும். போட்டி நடத்துபவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**I,** வெற்றிபெறும் போட்டியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

**J ,** விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் **ரமலான் 29(2021)**

## கேள்விகள்:

1, நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக!

2, ஏழு வானங்களாக ஒழுங்குபடுத்தினான்,

3, அல்லாஹ்வுக்கு அழகிய கடன் கொடுப்போர் யார்?

4, ஏழு கதிர்களை முளைக்கின்றன, ஒவ்வொரு கதிரும் நூறு தானியங்களை ..,

5, நான் அறிவீனர்களில் ஒருவனாக ஆகிவிடுவதைவிட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுகிறேன் என்றார்.

6, சில கற்பாரைகளிலும் ஆறுகள் பொங்கி எழுகின்றன.

7, ஹாரூத், மாரூத் என்ற பெயர்கள் வரும் வசனம் எது?

8, அறிந்து கொண்டே உண்மையை பொய்யுடன் கலக்காதீர்கள்.

9, தர்மங்களை நீங்கள் வெளிப்படையாக செய்தால் அதுவும் நல்லதே.

10,  அல்லாஹ்விடம் அங்கிகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாம்,

11, எங்கள் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக!

12, அல்லாஹ்விடம் ஈசாவுக்கு உதாரணம் ஆதம்மை போன்றே,

13, எங்களுக்கு நேர்வழி காட்டியபின் எங்கள் உள்ளங்களை வழிதவற செய்துவிடாதே,

14, ஒவ்வொரு உயிரும்(ஆத்மாவும்) மரணத்தை சுவைக்கும்,

15, மூவாயிரம் மலக்குகள்..,

16, மனிதன் பலவீனமானவனாக படைக்கப்பட்டுள்ளான்.

17, அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டோரை இறந்தோர் என எண்ணாதீர்கள்,

18, அல்லாஹ்வை விட அதிகம் உண்மை பேசுபவன் யார்?

19, அல்லாஹ் இபுறாஹிமை தோழராக எடுத்து கொண்டான்.

20, அல்லாஹ்வை எங்களுக்கு கண்கூடாக காண்பி என மூஸா நபியிடம் அந்த மக்கள் கேட்டதாக சொல்லும் வசனம் எது?

21, ஆண்கள் பெண்களை நிர்வாகம் செய்யக்கூடியவர்கள் என வரும் வசனம் எது ?

22, அல்லாஹ் ஒரு காகத்தை அனுப்பியதாக சொல்லும் வசனம் எது?

23, சொத்தில் ஆண்களுக்கும் பங்கு(பாகம்) உண்டு, பெண்களுக்கும் பங்கு(பாகம்)உண்டு.

24, சத்தியத்தை முறித்தல்க்கான பரிகாரம் சம்பந்தமாக வரும் குர்ஆன் வசனம் எது?

25, , நீ என்னை கைப்பற்றிய பிறகு நீயே அவர்களை கண்காணிப்பவன்.

26, இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும் வீணும் தவிர வேறில்லை.

27, திருடுபவர்களின் கையை வெட்ட வேண்டும் என்ற சட்டத்தை சொல்லும் வசனம் எது ?

28, நன்மை செய்தவருக்கு அதுபோன்ற பத்து மடங்கு உண்டு எனக்கூறும் வசனம் எது?

29, அவனுக்கு(அல்லாஹ்வுக்கு) மனைவி இல்லாதிருக்க எவ்வாறு பிள்ளை இருக்க முடியும்?

30, வறுமைக்கு பயந்து குழந்தைகளை கொல்லாதீர்கள்.

31, அல்லாஹ் வெட்க(மானக்)கேடானதை ஏவமாட்டான் எனக்கூறும் வசனம் எது?

32, எழுதபடிக்க தெரியாத(உம்மி) இத்தூதர் எனக்கூறும் வசனம் எது ?

33, மூஸா தம் சகோதரனின் தலை(முடி)யை பிடித்து இழுத்தார் எனக்கூறும் வசனம் எது ?

34, உங்களின் மக்கட் செல்வமும், பொருட் செல்வமும் சோதனையே எனக்கூறும் வசனம் எது ?

35, இரத்த பந்தமுடையோர் ஒருவர் மற்றவர்க்கு அல்லாஹ்வின் வேதத்தின் உள்ளபடி நெருக்கமானவர்கள்.

36, , அவர்களுடைய தொழுகை சீட்டி அடிப்பதும் கை தட்டுவதுமே அன்றி வேறில்லை.

37, அல்லாஹ்வின் (பிரகாசத்தை) ஒளியை தனது வாய்களால் ஊதி அணைக்க நாடுகின்றனர்.

38, தர்மங்களை கொடுக்க வேண்டியவர்கள் என குறிபிட்ட எட்டு வகையினரை அல்லாஹ் கூறுகிறான் அந்த வசனம் எது?

39, நுறு பேர் இருந்தால் இரு நுறு பேரை அவர்கள் வென்றுவிடுவார்கள்,

40, இணைவைப்பாளர்கள் அசுத்தமானவர்கள் என கூறும் வசனம் எது?

41, ஒவ்வொரு வருடமும் ஒரு முறையோ இரண்டு முறையோ அவர்கள் சோதிக்கப்படுகிறார்கள்,

42, அல்லாஹ்வின் நேசர்களுக்கு எந்த அச்சமும் இல்லை,

43, அல்லாஹ் உங்களை அமைதி இல்லத்திற்கு அழைக்கிறான்,

44, நூஹே! நீர் எங்களிடம் தர்க்கம் செய்து விட்டீர்,

44, நான் உங்களிடம் எந்த கூலியும் கேட்கவில்லை என்னுடைய கூலி அல்லாஹ்விடமே உள்ளது.

46, கப்பல் ஜுதி மலை மேல் நின்றது.

46, உமது இறைவன் நாடியிருந்தால் மனிதர்களை ஒரே சமுதாயமாக ஆக்கியிருப்பான்.

47, தமது கைகளை அறுத்து கொண்ட பெண்களின் நிலை என்ன ?

48, கவலையால் அவரது கண்கள் வெளுத்துப் போயிருந்தன.

49, அல்லாஹ்வை நினைவுகூர்வதால் தான் உள்ளங்கள் அமைதியுறுகின்றன.

50, கெட்ட மரத்தை உவமையாக கூறும் வசனம் எது ?

51, அல்லாஹ் தான் நாடுவதை அழிப்பான்.

52, என்னையும், என் பிள்ளைகளையும் சிலைகளை வணங்குவதை விட்டும் காப்பற்றுவாயாக எனக்கூறும் வசனம் எது?

53, இவர்கள் என்னுடைய விருந்தாளிகள் எனக்கூறும் வசனம் எது?

54, ஏழுவாயில்கள் உள்ளன எனக்கூறும் வசனம் எது?

55, அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் எண்ணினால் உங்களால் எண்ணி முடியாது.

56, திரும்ப திரும்ப ஓதப்படும் ஏழு வசனங்களையும்.., எனக்கூறும் வசனம் எது?

57, பெண் குழந்தை பற்றி நற்செய்தி கூறப்பட்டால்..., எனக்கூறும்  வசனம் எது?

58, அல்லாஹ்வுக்கு உதாரணங்களை(உவமைகளை) கூறாதீர்கள் எனக்கூறும் வசனம் எது?

59, குர்ஆனை ஓதும் போது விரட்டபட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுங்கள் எனக்கூறும் வசனம் எது?

60, வருமைக்கு அஞ்சி பிள்ளைகளை கொல்லாதீர்கள்,

61, அவர்களிடம் அழகிய முறையில் விவாதம் புரிவீராக! எனக்கூறும் வசனம் எது?

62, அவர்களை "சீ" என்று கூட கூறாதீர்

63, உனது குதிரைப்படையும், காலாட்படையும் அவர்களுக்கு எதிராக அணிதிரட்டு,

64, வீண் விரயம் செய்வோர் ஷைத்தானின் சகோதரர்களாவர்.

65, மனிதன் பெரும் உலோபியாக (கஞ்சனாக) இருக்கிறான்.

66, யஃஜூஜ் மஃஜூஜ் எனக்கூறும் வசனம் எது ?

67, அவர்களிடம் அர் ரஹ்மானுடைய வசனங்கள் ஓதப்பட்டால் அழுது ஸஜ்தாவில் விழுவார்காள்,

68, கடல்(நீர்) யாவும் மையாக ஆனாலும் எனது இறைவனின் ..., எனக்கூறும் வசனம் எது?

69, நான் இதற்க்கு முன்னரே மரணமடைந்து முற்றிலும் மறக்கடிக்கப்பட்டுவளாக ஆகியிருக்க கூடாதா?

70, உங்களில் எவரும் அதனை (நரகத்தை) கடக்காமல் இருக்க முடியாது.

71, என் இறைவா! (உலகில்) நான் பார்வையுள்ளவனாக இருந்தேனே, இங்கு நீ என்னை ஏன் குருடனாக எழுப்பினாய்?

72, எனது நாவில் உள்ள முடிச்சை அவிழ்த்து விடுவாயாக!

73, அவர்களை ஸாமிரி வழிகெடுத்து விட்டான் எனக்கூறும் வசனம் எது?

74, நீதியான தராசுகளை நிறுவோம்..,

75, எழுதப்பட்ட ஏடுகளை சுருட்டுவதைப் போல் வானத்தை நாம் சுருட்டும்..,

76, இவர் ஒரு கவிஞர்!

77, உங்களுக்கு முஸ்லிம்கள் என பெயரிட்டான்.

78, அல்லாஹ்வை பற்றி அவர்களிடம் கூறப்பட்டால், அவர்களின் இதயங்கள் நடுங்கி விடுகின்றன.

79, பூமியில் எவ்வளவு காலம்(ஆண்டு) வாழ்ந்தீர்கள் ? என்று கேட்பான்.

80, அவரது சக்திக்கு மேல் சிரமம் அளிப்பதில்லை.

81, நமது இவ்வுலக வாழ்க்கையை தவிர வேறு வாழ்க்கை இல்லை,

82, ஒவ்வொருவருக்கும் நூறு கசையடி கொடுங்கள்.

83, தனது மனோ இச்சையைத் தன் தெய்வமாக எடுத்து கொண்டவனை பார்த்தீரா?

84,உங்கள் வீடுகள் அல்லாத வேறு வீடுகளில் நுழைவதாக இருந்தால் அனுமதி பெறாமலும் ஸலாம் கூறாமலும் நுழையாதீர்கள்.

85, அவற்றை பரத்தபட்ட புழுதியாக ஆக்கிவிடுவோம்.

86, அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன எனக்கூறும் வசனம் எது ?

87, ஓர் ஈயைக் கூட படைக்க முடியாது எனக்கூறும் வசனம் எது ?

88, “முஹம்மத்” என பெயர் வரும் வசனம் எது ?

89, ஃபிர்தவ்ஸ் எனும் சொர்க்கம் பற்றி சொல்லப்படும் வசனம் எது?

90, நியே இம்மையிலும் மறுமையிலும் எனது பாதுகாவலன்.

91, “மகாமே மஹ்மூத்"( புகழ் பெற்ற) இடத்தில் உம்மை உமது இரட்சகன் எழுப்ப கூடும்.

92, “மஸீஹ்” அல்லாஹ்வின் மகன் என்றும் கூறுகிறார்கள்.

93, அர்ரஹ்மானுடைய அடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பார்கள்.

94, அவனது அர்ஷ் தண்ணீரின் மீது இருந்தது.

95, தூதர்கள் அச்சமுதாயத்தின் மொழியிலே அனுப்பி வைத்தோம் எனக்கூறும் வசனம் எது?

96, வழுக்கு பாறையை உவமையாக சொல்லும் வசனம் எது ?

97, சொத்தில் ஆண்களுக்கும் பங்கு(பாகம்) உண்டு, பெண்களுக்கும் பங்கு(பாகம்) உண்டு.

98, அவனே(அல்லாஹ்) இரவில் உங்கள் உயிர்களை கைப்பற்றுகின்றான்.

99, ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை சுவைத்தே தீரும்,

100, யாருடைய நன்மையின் எடை கனமாக இருக்குமோ அவர்கள்தாம் வெற்றி பெற்றோர்,